**பள்ளிக்கல்வித்துறை – விழுப்புரம் மாவட்டம் – பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **குறுந்தேர்வு – 1 (2024-25)** **மதிப்பெண்கள் – 25**

**உரிய விடையினைத் தெரிவு செய்து எழுதுக.** 5×1=5

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.------

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா

இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது---------

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை....

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

4. மெத்த அணிகலன்களாகத் தமிழழகனார் குறிப்பிடும் நூல் --------- ஆகும்.

அ) ஐஞ்சிறு காப்பியங்கள் ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்

இ) சங்க இலக்கியம் ஈ) பக்தி இலக்கியம்

5. 'கேட்டாவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடர் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே---------------

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4×2=8

6. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

7. மண்ணும் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடித்தாழ வாழ்த்துவமே! இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

8. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துக.

9. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

10. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்றார் பாரதியார்.

ஆ. கால வெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது தமிழ்.

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 4×3=12

11. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. - இதுப்போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

12. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

13. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

14. உரைப்பத்தியினைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக்காட்டுவது மொழியாதலின் அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப்பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர்கள். ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

அ. புல மக்களால் அமையப்பெறுவது எது?

ஆ.வளத்திற்கும் அறிவொழுக்கத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

இ. மற்ற உயிரினின்றும் திருந்திய மக்களை பிரித்துக்காட்டுவது எது?

15. "தென்னன் மகளே" எனத் தொடங்கும் 'அன்னை மொழியே' பாடலினைப் பிழையின்றி எழுதுக.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com